## சென்னையில் நடைபெற்ற புதுமையான நிகழ்ச்சி

# சுதா ரகுநாதனுடன் தாவரங்களும் பாடியது

**சென்னை, பிப். 12:**

**தாவரங்களுக்கும் இசை அறிவு உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் சென்னையில் நடைபெற்ற 'செடிகளின் சங்கீதம்' என்ற புதுமை நிகழ்ச்சியில் பிரபல பாடகி சுதா ரகுராதனுடன் சேர்ந்து செடிகளும் சேர்ந்திசை எழுப்பின.**

இத்தாலியில் உள்ள 'டாமன்ஹர்' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் 'தாவரங்களின் இசை' என்ற பெயரில் புதிய கருவியை வடிவமைத்துள்ளனர்.

செடிகளின் இலை, தண்டு, வேர் ஆகியவற்றை வயர்கள் மூலம் இணைத்து, நாம் அதன் எதிரில் நின்று பாடினால் அதற்கு ஏற்றார்போல செடிகளும் இணைந்து இசை எழுப்புகின்றன.

இந்த புதுமை நிகழ்ச்சி நேற்று மாலை சென்னை தி. நகர் வாணிமஹாலில் நடைபெற்றது. கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தார் முன்னின்று நடத்திய நிகழ்ச்சியில் சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் டி.ஆர்.கார்த்திகேயன், தொழிலதிபர் முரளி உள்பட பலர் பங்கேற்றனர்.



**டாமன்ஹர் அமைப்பைச் சேர்ந்த செடி இசை கலைஞர்கள் எஸ்பரிடே, மகாகோ ஆகியோருக்கு ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட் உரிமையாளர் முரளி விருதுகளை வழங்கினார். உடன் கர்நாடக இசைப்பாடகி சுதா ரகுநாதன் மற்றும் முன்னாள் சிபிஐ இயக்குனர் கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.**

பிரபல இசைப் பாடகி சுதா ரகுநாதன் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று செடிகளின் முன் நின்று வசந்தி, காப்பி, சிந்துபைரவி, ஹம்சத்வனி உள்ளிட்ட ராகங்களில் பாடினார். அவருடைய பாடல்களுக்கு ஏற்றவாறு செடிகளும் சேர்ந்திசை எழுப்பியது.

அதைத் தொடர்ந்து இத்தாலி 'டாமன்ஹர்' அமைப்பைச் சேர்ந்த எஸ்பெரிடே, மாக்காகோ என்ற இரு இளம் பெண்கள் 'கோரஸ்' இசை பாட அதற்கு ஏற்ற வகையிலும் செடிகள் இசை எழுப்பியதைக் கண்டு வாணிமகால் அரங்கில் குழுமியிருந்த பொதுமக்கள் அனைவரும் எழுந்து நின்று பலத்த கரவொலி எழுப்பினர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக சுதா ரகுநாதன் தெரிவித்தார்